**நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டம் - 2021**

நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திட்ட 2015 நவம்பர் 06 ஆந் திகதிய 5685 - எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் பட்டோலை II, பிரிவு II (சீ) (3) மற்றும் 2010 யூலை 31 ஆந் திகதிய சர்வதேச அபிவிருத்தி சங்கத்தின் கடன் மற்றும் மானியங்களின் பொது நிபந்தனைகளின் 4.09 (ஆ) ஆம் உறுப்புரை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் குழாயிடப்பட்ட தண்ணீர் சேவைகளிற்கும் முன்னேற்றப்பட்ட சுகாதாரத்திற்ம் அணுகுவழிகளை அதிகரித்தலும் ஒன்றிணைந்த நிறுவனங்களின் இயலளவை வலுப்படுத்துவதும் செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நகர, கிராமிய மற்றும் பெருந்தோட்ட நீர் வழங்கல் மற்றும் சுகாதார திட்டங்களின் புனரமைப்பு மற்றும் விரிவாக்கல், தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் இயலளவை வலுப்படுத்தல், பயிற்சியளித்தல் மற்றும் தண்ணீர் தரத்தினை அடையாளமிடல் ஊடாக துறைகளின் இயலளவை கட்டியொழுப்புதல் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் என்ற பெயருடைய 04 கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றன. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 27,590 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 183.90 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 24,750 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 165 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 2,840 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கம் மற்றும் சமூக பங்களிப்பு ஊடாக நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2015 திசெம்பர் 07 இல் தொடங்கியிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2022 மார்ச் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.1. **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம், நிதிக்கூற்றுக்களில் ரூபா 49.06 மில்லியன் தொகையான சமுதாய பங்களிப்பு இனங்கண்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 49.06 | நாங்கள் 2022 இல் சமுதாய பங்களிப்பை கணிப்பீடு செய்து மூலதனமாக்குவோம். மேலும், சில செயற்திட்டங்கள் மூலதனமாக்கியிருக்கவிலில்லை எனவே, சமுதாய பங்களிப்பு கணப்பீடு செய்ய முடியாதிருந்தது. | பூர்த்தியாக்கப்பட்ட செயற்திட்டங்களிற்கான சமுதாய பங்களிப்பு இனங்காணப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறான வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் பேணப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம், ரூபா 877.16 மில்லியன் தொகையான கடன் வட்டி, ரூபா 539.56 116 மில்லியன் தொகையான சேவைக் கட்டணங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 1,416.72 | இந்த கொள்கை 2018 ஆம் ஆண்டிலிருந்து திறைசேரியால் நிறுத்தப்பட்டிருந்ததுடன் இது எங்களுடைய திறைசேரி வாக்குப்பண அறிக்கையிலும் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2013 நவம்பர் 29 ஆந் திகதிய 230.˙.2013 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். |
| (இ) | சபையால் செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக விடுவிக்கப்பட்ட ஊழியர்களிற்காக ரூபா 60.3 மில்லியன் தொகை மீளளிக்க வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், தேசிய நீர் வழ்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிற்கு செலுத்த வேண்டியதாக ரூபா 30.5 மில்லியன் மாத்திரம் இனங்காணப்பட்டிருந்தது. எனவே, நிதிக்கூற்றுக்களில் ரூபா 29.8 மில்லியனால் நடைமுறைப் பொறுபபுகள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 29.8 | 2021 ஆம் ஆண்டின் போது நாங்கள் சில மாதங்களிற்காக தேசிய நீர் வழ்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் சம்பளங்களை மீளளித்திருந்தோம். நாங்கள் 2021 ஆம் ஆண்டில் ஏற்கனவே மீதி செலவினங்களை அட்டுறுவாக்கியிருந்தோம். | செயற்திட்டத்திற்கு விடுவிக்கப்பட்ட ஊழியர்களிற்காக தேசிய நீர் வழ்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் செலுத்தப்பட்ட சம்பளங்கள் செயற்திட்டத்தின் கணக்கேடுகளில் உள்ளபடியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | முன்னைய ஆண்டின் போது பூர்த்தியாக்கப்பட்டு பரீட்சிக்கப்பட்ட ரூபா 21.3 மில்லியன் பெறுமதியான இரண்டு நீர் வழங்கல் செயற்திட்டங்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூலதனமாக்கப்பட்டிருந்தது. | 21.3 | இறுதி விலைப் பட்டியல் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. இந்த விடயம் காரணமாக, மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | நீர் வழங்கல் செயற்திட்டங்களின் பூர்த்தியாக்கப்பட்ட பெறுமதி மூலதனமாக்கப்பட வேண்டும். |

**2.2 தீர்க்கப்படாத மீதிகள்**

| இல | விபரங்கள் | தொகை ரூபா மில்லியன் | தீர்க்கப்படாத காலப்பகுதி | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்தகாரர் பிடிகாசு | 283.64 | 3 ஆண்டுகளிற்கு மேல் | சில செயற்திட்டங்களில் பிடிகாசு விடுவிக்கப்பட்டதுடன் ஏனையவை இந்த 2021 ஆம் ஆண்டின் போது விடுவிக்கப்படும். | குறைபாட்டு பொறுப்பு காலத்தின் பின்னர் ஒப்பந்தகாரரின் பிடிகாசினை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வெளிவாரி நிறுவனங்களில் வைப்புச் செய்யப்பட்ட குறுகியகால வைப்புகள் | 88.81 | 3 ஆண்டுகளிற்கு மேல் | செயற்திட்டம் பூர்த்தியாக்கப்பட்ட போதிலும் நாங்கள் 2 ஆண்டு காலத்தின் பின்னரே அந்த வைப்புகளை கோர முடியும். | தாமதமில்லாமல் செலுத்தப்பட்ட முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலீச குடியரசு நிதிப் பிரமாணம் | | | |
| (i) பிரமாணம் 170 (3) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது 4 ஒப்பந்தகாரரிடமிருந்து கழிக்கப்பட்ட ரூபா 8.45 மில்லியன் தொகையான | நாங்கள் அரசாங்க வருமானத்திற்கு இதனை அனுப்புவோம் ஒருதடவை இறுதி கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கி நடக்க வேண்டும |

| | | | |
|---|---|---|---|
| | தாமதக் கட்டணங்கள் 2022 மே 31 வரையும் திரண்ட நிதிக்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை | | |
| (ii) பிரமாணம் 245 மற்றும் 257 | கணக்காய்வு மாதிரிச் செவ்வையின் பிரகாரம், 23 கொடுப்பனவு சான்றிதழ்கள் சான்றுபடுத்தாமல் ரூபா 178.5 மில்லியன் தொகைக்கு சமமான செலுத்தப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | நாங்கள் ஏற்றுக்கெள்ளவதுடன் நர்கள் தவறை திருத்துவோம். | நிதிப்பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கி நடக்க வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கூறு | நடவடிக்கை | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப் பட்ட பௌதீக செயலாற்றல் | அடையப்பட்ட செயலாற்றல் | தாமதமான நாட்கள் | | |
| நகர, கிராமிய மற்றும் தோட்டத்துறை நீர் வழங்கல் மற்றும் சுகாதார திட்டங்களின் புனரமைப்பு மற்றும் விரிவாக்கல் | நகர நீர் வழங்கல் மற்றும் சுகாதார திட்டம் | | | | | |
| | | சதவீதம் | சதவீதம் | | | |
| | பம்பகின்ன நீர் வழங்கல் திட்டங்கள் | 100 | 70 | 100 | 2022 ஆகஸ்ட் மாதத்தில் மொத்த வேலைகளையும் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | (a இலிருந்து y வரை)<br>i. முகாமைத்தும் வழங்கிய இலக்குத் திகதிக்குள் ஒப்பந்த வெலைகளை பூர்த்தியாக்குதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.. |
| | முழங்காவில நீர் வழங்கல் செயற்திட்டம் | 100 | 90 | 693 | பூர்த்தியாக்கலிற்காக இன்னொரு மூன்று மாத காலம் தேவைப்பட்டது. | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் புனரமைப்பு** | | | | | ii. ஒப்பந்தகாரரிகளின் ஏற்கமுடியாத காரணங்களிற்காக கால நீடிப்புகள் வழங்க வேண்டியதில்லை அத்துடன் ஒப்பந்த உடன்படிக்கை பிரகாரம் நலிவான செயலாற்றல் நிகழ்ந்தமையால் தாமதக் கட்டணங்கள் கழிக்க வேண்டும். |
| ஒருடெடிவேவ நீர் வழங்கல் திட்டம் (கட்டம் 1) | 100 | 92 | 592 | இது பூர்த்தியாக்கப்பட்டதுடன் நீர்த்தேக்கத்தில் பம்புகள் பொருத்திய பின்னர் விரைவில் பரீட்சிக்கப்படும். | |
| தியத்தலாவ நீர் வழங்கல் திட்டம் | 100 | 31 | 935 | இடைநிறுத்தப்பட்டது. செயலற்றல் பிணைமுறி பறிமுதல் செய்யப்பட்டதுடன் முற்பணமும் அறவிடப்பட்டது. | iii. நலிவாக செயற்பட்ட ஒப்பந்தகாரர்களிற்கு ஒப்பந்தங்கள் வழங்கக்கப்பட வேண்டியதில்ல்லை. |
| ஒருடெடிவேவ நீர் வழங்கல் திட்டம் (கட்டம் I1) | 100 | 95 | 480 | மெருகூட்டிய பின்னர் இணைப்புகள் தொடங்கப்பட்டது. நீர் பெறவேண்டியிருந்தது. இந்த வேலை யூலை இறுதியளவில் தொடங்கப்பட முடியும். | iv. சாத்தியமானளவு விரைவில் நிறுதிய ஒப்பந்தங்களிற்காக புதிய ஒப்பந்தங்கள் வழங்க வேண்டும். |
| ஜட்டியல்ல நீர் வழங்கல் திட்டம். | 100 | 70 | 277 | பௌதீக முன்னேற்றம் 75%. ஆக உள்ளது. | |
| வெலொகபொல நீர் வழங்கல் திட்டம். | 100 | 75 | 228 | நாட்டின் தற்போதைய நிலைமை காரணமாக ஒப்பந்தகாரரின் செயலாற்றல், எரிபொருள் மற்றும் பொருட்கள் தட்டுப்பாடு என்பன காரணமாக தாமதமாக உள்ளது. | |
| வுலுவன நீர் வழங்கல் திட்டம் | 100 | 88 | 511 | வீட்டு இணைபபு நிகழ்ச்சித் திட்டம் செயற்பாட்டில் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | உள்ளதுடன் சுத்திகரிப்பு பொறி பரீட்ச்சிக்கப்பட்டுள்ளது. |
| டொம்பேகம்மன கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாணம் | 100 | 97 | 574 | சமூக கருத்துவேறுபாடுகள் காரணமாக தாமதம். |
| சங்கிலிபுரம் கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 65 | 360 | ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல் காரணமாக கணிசமானளவு தாமதம். |
| கோப்பே நீர் வழங்கல் திட்டம் | 100 | 70 | 337 | பாவணையாளரின் எதிர்ப்பு காரணமாக தாமதம். |
| புலத்கொவுபிட்டி ஒருங்கிணைந்த கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 80 | 499 | இணைப்பு நிகழ்ச்சித்திட்டம் 2022 யூலை இறுதியளவில் தொடங்கப்படும். மூன்று மாதங்களிற்குள் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. |
| பீலகண்டுர கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 75 | 1463 | பரீட்ச்சிக்கப்பட்டது. சுத்திகரிப்பு பொறி பூர்த்தியாக்கப்பட்டது. முன்னேற்றம் 80% ஆக உள்ளது. |
| தண்டுவாண் நீர் வழங்கல் திட்டம் | 100 | 75 | 358 | மின்சாரம் வழங்கலில் சிறிய தாமதம் உள்ளது. வீட்டு இணைப்பு நிகழ்ச்சித்திட்டம் மூன்று மாதங்களில் பூர்த்தியாக்கப்பட்டது. |
| கல்மடுநகர் கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 100 | 80 | 1058 | நாங்கள் தற்போது ஒப்பந்தத்தை நிறுத்துவதற்கு கலந்துரையாடப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| ஜெயபுரம் நீர் வழங்கல் திட்டம் | 100 | 90 | 644 | இணைப்பு நிகழ்ச்சித்திட்டம் விரைவில் தொடங்கப்படும். |
| இயக்கச்சி நீர் வழங்கல் திட்டம் | 100 | 85 | 902 | ஒப்பந்தகாரரின் நலிவான செயலற்றல் காரணமாக சிறிய தாமதம் உள்ளது. |
| திருமுறிகண்டி புதிய நீர் வழங்கல் திட்டம் (நீர்தேக்கம்) | 100 | 57 | 847 | ஒப்பந்தம் நிறுத்தப்பட்டிருந்தது. |
| நெலுன்வேவ புனரமைப்பு நீர் வழங்கல் செயற்திட்டம் | 100 | 75 | 178 | ஏற்கனவே பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. |
| **பொதுமக்க சுகாதாரம்** | | | | |
| பதுளை மாவட்டத்தில் பொதுமக்கள் கேட்பொர் கூடம் மற்றும் வெலிமட விஜயா மஹா வித்தியாலயம் சுகாதார முன்னேற்றத்தின் (பாடசலை) நிர்மாணம். | 100 | 92 | 323 | விலை வேறுபாடு, பொருட்கள் இன்மை மற்றும் பொருட்கள் ஏற்றியிறக்கல் பிரச்சனைகள் போன்ற காரணமாக நிர்மாணம் தாதம். |
| **சித்தவைத்திய சுகாதாரம்** | | | | |
| மொனறாகலை மாவட்டத்தில் றதுகலவில் சித்த வைத்திய மலசல கூடத்தின் நிர்மாணம். | 100 | 60 | 505 | -மேற்படி- |
| **பாடசாலை சுகாதாரம்** | | | | |
| இரத்தினபுரி மாவட்டத்தில் நிவித்திக்கல, கீரகல்ல | 100 | 65 | 201 | ஒப்பந்தம் நிறுத்தப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| பாடசாலைகள், சர்வோதய பிறிவேன, கொலன்னாவ என்பவற்றில் சுகாதார வசதிகளின் நிர்மாணம் மற்றும் ஜதவனறம வண செனசும, நாகன்டல மற்றும் சன்னஸ்கம சமுதாய அடிப்படை நிறுவனங்கள் என்பவற்றில் நீர் வழங்கல் திட்டங்கள். | | | | |
| இரத்தினபுரி மாவட்டத்தில் பாடசாலை/ வைத்தியசாலை சுகாதார வசதிகளின் நிர்மாணம். | 100 | 60 | 247 | -மேற்படி- |
| முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலை சுகாதார நிர்மாணம். | 100 | 90 | 260 | தற்போது வரை நிமாணத்தின் 95 சதவீதம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. |
| கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலை வசதிகளின் நிர்மாணம்- பொதி 01 | 100 | 35 | 197 | சுகாதாரப் பொருட்கள் இன்மை மற்றும் பொருட்கள் ஏற்றியிறக்கல் பிரச்சனைகளால் ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் நிர்மாணம் பின்னடைவாக இருந்தது. |

**3.2 செயற்திட்டங்கள் தொடங்குவதிலுள்ள தாமதங்கள்**

---------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| இரத்தினபுரி மாவட்டத்தில் புனரமைப்பு திட்டங்களிற்காக PE, Upvc குழாய்கள் மற்றும் உபபாகங்கள் வழங்கி பொருத்துதல் ஒப்பந்தகாரருக்கு முற்பணமாக ரூபா 4.6 மில்லியன் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், | PE குழாய்கள் மற்றும் பொருத்திகளின் பொருட்கள் வழங்கப்பட்டதுடன் Upvc குழாய்கள் சந்தையில் பொருள் தட்டுப்பாடு காரணமாக இன்னமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட முகாமையாளர்கள் பட்டயப்படுத்திய கால அட்டவணைக்குள் ஒப்பந்தங்களை பூர்த்தியாக்கும் நோக்கில் வழங்குகின்ற ஒப்பந்தங்களின் முன்னேற்றங்களை கண்காணிக்கின்றனர். ஒப்பந்த |

| | | |
|---|---|---|
| ஒப்பந்தகாரர் 2021 திசெம்பர் 31 வரையும் வழங்கலைத் தொடங்குவதற்கு தவறியிருந்தார். | | நிபந்தனைகளின் பிரகாரம், நலிவாக செயற்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து தாமதக் கட்டணங்கள் கழிக்கப்பட வேண்டும். |

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| இல. | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மூல ஒப்பந்த காலத்தை விஞ்சிய போதிலும் அதே செயற்திட்டங்களிற்காக இரண்டு முதல் ஏழு சந்தர்ப்பங்கள் வரையான வீச்செல்லையில் பத்து நீர் வழங்கல் செயற்திட்ட ஒப்பந்தகாரர்களிற்கு கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தாமல் பல ஆண்டுகளாக ஒப்பந்தகாரர்களுடன் ரூபா 343.46 மில்லியன் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணங்களை வைத்திருப்பதற்கு அனுமதித்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல், சமூக எதிர்ப்புகள், செயற்திட்டங்களை பூர்த்தியாக்குவதற்கு அனுமதிக்கப்பட்ட வரையறுத்த காலப் பகுதி, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பிரதேச சபைகள் என்பவற்றிடமிருந்து அனுமதிகள் பெறுவதில் தாமதம் போன்றன செயற்திட்டத்தில் தாமதங்களை விளைவித்திருந்தது. | மாவட்ட முகாமையாளர்கள் பட்டியலிடப்பட்ட வரையறுத்த காலப் பகுதிக்குள் செயற்திட்டங்களை பூர்த்தியாக்கும் நோக்கில் செயற்திட்ட முன்னேற்றத்தக் கண்பாணிக்க வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்தகாரர்கள் இருக்கின்ற ஒபபந்தங்களில் அவர்கள் நலிவாக செயற்பட்ட போதிலும் இரண்து ஒப்பந்தகாரர்களிற்கு ஐந்து ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் நிதிகளை செயற்திட்ட நடவடிக்கைகளில் வினைத்திறனாக பயன்படுத்தாமல் ரூபா 140.65 மில்லியன் தொகையான முற்பணங்கள் கையில் வைத்திருந்தனர். | புளத்கொவுபிட்டிய, ஒருபன்டிவேவ II மறறும் பொன்நகர் நீர் வழங்கல் திட்டங்களின் முற்பணக் கொடுப்பனவுகள் இறைக்கும் இல்லத்தின் மின்சார் வழங்கல் மற்றும் மின்சார வயரிடல் வழியில் மரம் வெட்டுவதில் தாமதம் போன்றவற்றால் தாமதமாக இருந்தது. | -மேற்படி- |
| (இ) | கிளிநொச்சி மாவட்டத்தில் ரூபா 216.93 மில்லியன் கிரயத்தில் பொன்நகர் பாரதிபுரம் நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட சிவில் ஒப்பந்த வெலைகள் 2018 ஒக்தோபர் 20 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டுள்ளது. பின்னர், 20 சதவீதமான வேலைகள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போது ஒப்பந்தகாரரின் | இன்றுள்ளவாறு சுத்திகரிப்பு பொறி பரீட்சிக்கப் பட்டிருந்ததுடன் இணைப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடங்கப்படவுள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | நலிவான செயலாற்றல் காரணமாக ஒப்பந்தம் நிறுத்தப்பட்டிருந்தது. மேலும், மீதி வேலைகளின் பூர்த்தியாக்கல் வேறு ஒப்பந்தகாரருக்கு 2019 நவம்பர் 15 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2020 நவம்பர் 28 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டங்களின் நோக்கங்களை அடைவதில் மூன்று ஆண்டுகளிற்கு மேலான கருத்திற்கொள்ளக்கூடிய தாமதத்தின் விளைவால் 2022 மார்ச் 31 வரையும் பரீட்சிக்கப்பட்டு வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | மொனறாகலை சுத்திகரிப்பு பொறி நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் 12 மாத காலப்பகுதிக்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டு 2020 ஒக்தோபர் 20 இல் வழங்கப் பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல் காரணமாக மீளாய்வாண்டு இறுதிவரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்காததுடன் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 2022 மார்ச் 31 வரையும் 5 சதவீதாமாக மாத்திரம் இருந்தது. எவ்வாறாயினும், பட்டியலிடப்பட்ட பூர்த்தியாக்கல் காலத்தின் பின்னர் ஒப்பந்தகாரருக்கு காலநீடிப்பு வழங்கப்பட்டிருக்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது | கேள்வி கோரல் காலத்திற்குள் வேலைத் தளத்தை வாடிக்கையாளர் கையளித் திருக்கவில்லை. பிரதேச சபை அந்த வேலைத்தளத்தில் குப்பைகளை குவித்திருந்தது. ஆகவே, ஒப்பந்தகாரரின் நோக்கம் மாற்றமடைந்திருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்டவாறு செயற்திட்டத்தை பூர்த்தியாக்க முடியவில்லை. நாங்கள் ஒப்பந்தத்தை பரஸ்பரம் நிறுத்துவதற்கு தீர்மானித்திருந்தோம். | -மேற்படி- |
| (உ) | செயற்திட்டத்தின் முதலாவது கால நீடிப்பு 2022 மார்ச் 31 இல் காலாவதியான போதிலும் செயற்திட்ட நெறிப்படுத்தல் ஆவணதின் 15 ஆம் பிரிவின் பிரகாரம், மீளாய்வாண்டு இறுதிவரையும் பதுளை மாவட்டத்தில் இடை சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணத்திற்கான எந்தவொரு ஒப்பந்தமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அதே பிரிவிற்கு முரணாக, செயற்திட்ட நடவடிக்கைகள் அமுலாக்கப்படாதிருந்த குருநாகல் மாவட்டத்தில் இப்பாஹமுவ பிரதேச சபைக்கு ஒரு களிபவுசர் விடுவிக்கப்பட்டிருந்தது. | பொருத்தமான காணி கண்டு பிடிக்கப்பட்டதுடன் சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணம் செயற்பாட்டில் உள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மாதிரி தெரிவுச் செவ்வையின் பிரகாரம், நியாயமான காராணங்கள் எதுவுமில்லாமல் அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 8.14 ஆம் பிரிவிற்கு முரணாக வாடகை அடிப்படையில் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் போட்டிக் கேள்வி கோரல் நடைமுறை ஊடாக உரிய கேள்வியாளர்களை தவிர்த்ததன் விளைவால் இரணடு முதல் மூன்று தடவைகளாக நீடிக்கப்பட்டிருந்தது. | நாங்கள் வாகனங்களிற்காக புதிய கேள்வியை திரும்ப அமைப்பதற்கு படிமுறைகள் எடுத்தள்ளோம். அந்த ஒப்பந்தங்கள் புதிய ஒப்பந்தகாரர்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. நடைமுறையின் நலிவான செயலாற்றலாக உள்ளது. | -மேற்படி- |
| (எ) | செயற்திட்ட காலப்பகுதியின் போது 07 மாவட்டங்களில் 24,000 மலசல கூடங்கள் நிர்மாணிக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், திட்டமிட்ட மலசலகூடங்களில் 1,302 மலசல கூடங்கள் அல்லது 34 சதவீதத்தின் நிர்மாண நடவடிக்கைகள் மீளாய்வாண்டு இறுதிவரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | நலனாளிகள் தெரிவு பிரமாணம் மற்றும் ஏனைய விடயங்கள், நிகழ்ச்சித்திட்டத்தை நலனாளிகள் கைவிடல் மற்றும் திரும்ப பெறல் என்பவற்றில் வழங்கப்பட்ட தகுதி காரணமாக செயற்திட்டம் அமுலாக்கல் கட்டத்தில் உள்ளது. | -மேற்படி- |
| (ஏ) | செயற்திட்டத்தின் ஆரம்ப செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் கேகாலை, மொனறாகலை மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நிர்மாணிக்கப்பட வேண்டிய ஒவ்வொன்றிற்கும் ரூபா 250,000 உடன் நலனாளிகள் 84 விசேட சுகாதார அலகுகள் தேவைப்பட்டது. எவ்வாறாயினும், கேகாலை மற்றும் மொனறாகலை மாவட்டங்களில் 43 அலகுகள் அல்லது 50 சதவீதம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தது. மேலும், பதுளை மற்றும் மொனறாகலை மாவட்டங்களில் திட்டமிட்ட 566 சித்த மருத்துவ சுகாதார அலகுகளில் 154 அலகுகளின் நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டு இறுதிவரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | ஒழரிவு பிரமாணம் மற்றும் ஏனைய விடயம் காரணமாக அமுலாக்கலிற்கு கிளிநொச்சி நிகழ்ச்சித்திட்டம் தெரிவுசெய்யப் பட்டிருக்காததுடன் செயற்திட்டம் தகுதியுடைய 412 சித்த மருத்துவ நலனாளிகள் தெரிவு. செய்யப்பட்டனர். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | செயற்திட்ட நடவடிக்கைகளின் திட்டமிடல், வடிவமைப்பு, நிர்மாணங்களில் ஆலோசனை சேவைகள் வழங்குதல் ஒப்பந்தத்தின் ஆலோசனை சேவைகளிற்கான கொடுப்பனவில் ரூபா 880.63 மில்லியன் அல்லது 99 சதவீதத்திற்கு அதிகமானவை மீளாய்வாண்டில் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நடாத்தப்பட்ட மாதிரி பௌதீக கணக்காய்வின் பிரகாரம், மேற்குறித்த ஆலோசனை ஒப்பந்தத்தின் கீழ் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தரால், நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தங்களின் நலிவான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை, தேவையான செயற்திட்ட காலப்பகுதியின் முறையற்ற இனங்காணல், ஒப்பந்தங்களின் நலிவான வடிவமைப்பு போன்றவற்றால் செயற்திட்ட காலப்பகுதி முழுவதும் தொடர்ச்சியாக ஏற்பட்ட செயற்திட்ட இடைநிறுத்தல்கள், செயற்திட்ட நீடிப்புகள், முரண் கட்டளைகளை அனுமதித்தல், மேலதிக வேலைகள் அனுமதித்தல், உத்தியோகபூர்வ விடுதி நிர்மாணங்களின் மீள் வடிவமைப்புகள் போன்றன அவதானிக்கப்பட்டது. | செயலாற்றல் அதிகரித்தலில் ஆலோசனையாளர் மற்றும் வாடிக்கையாளரின் ஈடுபாடு குறைந்துள்ளது. எனவே, ஆலோசனையாளர் அந்த சகல விடயங்களிற்காகவும் முழுமையாக பொறுப்புடையவர் இல்லை. | -மேற்படி- |

**3.4 வேலைத்தள வருகைகளின் போது செய்யப்பட்ட அவதானிப்புகள்**

| இல | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| **(அ)** | **ஜலகமுவ கிராமிய நீர் வழங்கல் திட்டம்**<br>இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (அ) | வெலிபிடகென்ன மற்றும் கெலகம் நீர் வழங்கல் செயற்திட்டங்கள் தொடர்பில் நிர்மாணிக்கப்பட்ட நீர்த் தொட்டிகள் முறைப்படி சுத்திகரிக்கப் பட்டிருக்காததுடன் 2019 ஒக்தோபர் 31 இன் பின்னர் தண்ணீர் தரம் பரீட்சித்தல் நடாத்தப்பட்டிருக்கவில்லை. எனவே, பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டிய பாதுகாப்பான குடிதண்ணீர் தரம் மதிப்பிட முடியாதிருந்தது. | அமெரிக்கன் சீரரற்ற நிரப்புதல் மற்றும் மண்நிரப்புதல் பிரிவு என்பவற்றின் நீர் சுத்திகரிப்பு வசதி நிர்மாணிக்கப்பட்டதுடன் தண்ணீர் தரம் குடிதண்ணீர் நியமத்தில் இருந்தன. | பாதுகாப்பான குடிதண்ணீரை உறுதிப்படுத்தம் நோக்கில் தண்ணீர் தரம் காலரீதியாக பரீட்சிக்க வேண்டும். |

(ஆ) **உடுபட்டான கிராமிய நீர் வழங்கல் திட்டம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

| | | | |
|---|---|---|---|
| (i) | 450 வீட்டுரிமையாளர்களிற்காக பாதுகாப்பான குடிதண்ணீர் வழங்கும் நோக்கத்துடன் பதுளை மாவட்டத்தில் உடுப்படான நீர் வழங்கல் திட்டத்திற்கான ஒப்பந்தம் ரூபா 98.6 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டிருந்ததுடன் 2019 பெப்ரவரி 13 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல், பொதுமக்கள் எதிர்ப்பு மற்றும் நீர்த்தேக்கத்தின் நிர்மாண நடவடிக்கைகளிற்கு எதிராக தொடரப்பட்ட நீதி மன்ற வழக்கு போன்றன காரணமாக செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதற்கு தவறியிருந்தது. எனவே, செயற்திட்ட நடவடிக்கைகள் 30 மாதங்களிற்கு மேலாக தாமதப்பட்டிருந்தது. | நீர் வளத்திற்காக சமுதாயம் உட்படுத்தப்பட்டிருந்ததுடன் இறுதியாக நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. ஆகவே, ஒப்பந்தம் பரஸ்பரம் நிறுத்தப்பட்டிருந்தது. இது ஒப்பந்தகாரர் பிரச்சனையாக இருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்குவதற்கு முன்னர் நீர் வளம் மற்றும் காணிகள் தொடர்பான சகல பிரச்சனைகளும் தீர்க்கப்பட வேண்டும். |
| (ii) | 2018 திசெம்பர் 12 இல் உள்ளவாறு பூர்த்தியாக்க வேண்டியிருந்த பின்வரும் நடவடிக்கைகள் 2021 திசெம்பர் இறுதி வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.<br>• குழாய்கள் மற்றும் பொருத்திகள் பொருத்துதல்<br>• நீரிறைக்கும் பம்புகள் வழங்கல்<br>• தண்ணீர் தொட்டிகளின் நிர்மாணம்<br>• பராமரிப்பாளர் விடுதிகளின் நிர்மாணம் | சமூக எதிர்ப்புகளுடன் நிர்மாண வேலைகள் தொடர முடியவில்லை. | மாவட்ட முகாமையாளர்கள் பட்டியலிடப்பட்ட கால அட்டவணைக்குள் செயற்திட்டத்தைப் பூர்த்தியாக்கும் நோக்கில் செயற்திட்டத்தின் முன்னேற்றங்களை கண்காணிக்க வேண்டும். |
| (iii) | 2018 திசெம்பர் 12 இலிருந்து 2019 நவம்பர் 27 வரையான காலத்தை கருத்திற்கொள்ளும் போது ஒப்பந்தகாரர் உடுகட்டன முதல் கம்பஹா வரை வக்கோ அகழ்தல் இயந்திரத்தின் போக்குவரத்திற்காக 2019 பெப்ரவரி 05 இல் ரூபா 77,760 ஆன தொகையை செலுத்தியிருந்தார். | இயந்திரம் பயனற்றிருந்ததுடன் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் கலவைக் கிரயம் செலுத்தப்பட்டது. | சகல கொடுப்பனவுகளும் ஒப்பந்த உடன்படிக்கைக்கு அமைய செய்யப்பட வேண்டும். |
| (iv) | செயற்திட்ட நடவடிக்கைகளை தொடங்குவதற்கு தீர்ப்பு பெற்று 11 மாதங்களின் பின்னர் இது நவம்பர் 27 இல் நிறுத்தப்பட்டிருந்தது. எனவே, ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றலின் அடிப்படையில் செயற்திட்டத்தை நிறுத்துவதற்கான தீர்மானம் எடுப்பதிலுள்ள தாமதத்தால் | ஏற்கனவே இரண்டாவது ஒப்பந்தகாரர் வேலைகளை தொடருவதுடன் நிர்மாண பொருட் பற்றாக்குறை மற்றும் எரிபொருள் பற்றாக்குறைவும் வேலைகளின் முன்னேற்றத்தை பாதித்திருந்தது. | மாவட்ட முகாமையாளர்கள் பட்டியலிடப்பட்ட கால அட்டவணைக்குள் செயற்திட்டத்தைப் பூர்த்தியாக்கும் நோக்கில் செயற்திட்டத்தின் முன்னேற்றங்களை கண்காணிக்க |

| | | |
|---|---|---|
| ஒப்பந்தகாரரின் வேலைத்தள களஞ்சியங்களிற்கான வாடகை, உத்தியோகத்தர் கூலிகள், பிணைமுறி நீடித்தல் கட்டணங்ள் மற்றும் காப்புறுதி போன்றவற்றிற்காக ஏற்பட்ட செலவினங்களிற்காக ரூபா 2.7 மில்லியன் நட்டங்கள் ஏற்பட்டிருந்தது. மேலும், இடைநிறுத்லின் இறுதியில் ரூபா 66.16 மில்லியன் பெறுமதியான மிகுதி வேலைகள் செய்ய வேண்டியிருந்ததுடன் ரூபா 104.41 மில்லியன் கிரயத்தில் புதிய ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. எனவே, செயற்திட்டம் விலை தளம்பல் காரணமாக ரூபா 38.25 மில்லியனான இன்னொரு நட்டத்தை ஏற்க வேண்டியிருந்தது. ஒப்பந்தம் நிறுத்திய பின்னர் பௌதீக முன்னேற்றம் 52 சதவீதமாக இருந்த போது மிகுதி வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு 2021 நவம்பர் 15 இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டதுடன் 2022 யூலை 18 பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், இரண்டாவது ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல் காரணமாக உரிய காலத்தில் செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைவதற்கு கருத்திற்கொள்ள வேண்டிய தாமதங்கள் விளைந்தமையால் 50 சதவீத ஒப்பந்த காலப்பகுதி கடந்த பின்னர் 2022 மார்ச் இறுதி வரையும் செயற்திட்டத்தின் முன்னேற்றம் 25 சதவீதத்தில் இருந்தது. | | வேண்டும். |

(இ) **தியத்தலாவ நீர் வழங்கல் திட்டம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | | |
|---|---|---|
| (i) ரூபா 337.44 மில்லியன் கிரயத்தில் தியத்தலாவ நீர் வழங்கல் திட்டத்திற்காக 2018 மே 23 இல் வழங்கப்பட்ட ஒப்பந்தம் 12 மாத காலப்பகுதிக்குள் பூர்த்தியாக்க வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும் ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல் காரணமாக செயற்திட்டத்தின் முன்னேற்றம் 31 சதவீதமாக இருக்கும் போது மூன்று தடவைகள் காலநீடிப்பு பெற்ற பின்னர் 2022 சனவரி 20 இல் ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் மிகுதி வேலைகளை பூர்த்தியாக்குவதற்கான ஒப்பந்தம் 2022 மே மாத இறுதிவரையும் வழங்கப்பட்டிருக்கவில்லை. எனவே, சரியான நேரத்தில் ஒப்பந்தத்தை நிறுத்துவதற்கு தீர்மானம் எடுப்பதிலுள்ள தாமதம் காரணமாக செயற்திட்டத்தின் ஒப்பந்தம் | உடன்படிக்கை பிரகாரம் ஒப்பந்தம் நிறுத்தப்பட்டிருந்ததுடன் செயலாற்றல் பிணைமுறி மற்றும் முற்பண கொடுப்பனவு பிணைமுறி கோரப்பட்டு பறிமுதல் செயயப்ட்டது. | மாவட்ட முகாமையாளர்கள் பட்டியலிடப்பட்ட கால அட்டவணைக்குள் செயற்திட்டத்தைப் பூர்த்தியாக்கும் நோக்கில் செயற்திட்டத்தின் முன்னேற்றங்களை கண்காணிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கி 4 ஆண்டுகள் கடந்த பின்னரும் நோக்கங்கள் அடையப்பட்டிருக்காததுடன் செயற்திட்ட நடவடிக்கைகளை வினைத்திறனுடன் பயன்படுத்தாமையால் 2019 மே 06 இல் செலுத்தப்பட்ட ரூபா 57.65 மில்லியன் தொழிலாரம்பிப்பு முற்பணங்களை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். | | |
| (ii) | 2017 நவம்பர் 08 இல் வெளியிட்ட பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம், ஒப்பந்தகாரர் CIDA இல் நீர் வழங்கல் மற்றும் சுகாதார துறையில் தரம் அல்லது மேற்குறித்தவற்றில் பதிவுசெய்ய வேண்டும். எவ்வாறாயினும், 2014 இல் வெளியிட்ட திருத்திய உலக வங்கி கொள்வனவு வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டவாறு நீர் வழங்கல் மற்றும் சுகாதார துறைகளில் முன்னநுபவம் இல்லாத மேற்குறித்த ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்த கேள்விகோரல் ஆவணத்தின் பிரகாரம், DI மற்றும் PE குழாய்களிற்காக தொழிற்சாலை முன் பரிசோதகைள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உத்தியோகத்தர்களால் செய்யப்பட்டிருக்கவில்லை. | கேள்வி கோரும் நேரத்தில் ஒப்பந்தகாரர் நீர் வழங்கலில் CIDA C2 ஐ பூர்த்தி செய்திருந்தார். | ஒப்பந்தங்கள் அதிக பொறுப்புடைய கேள்வியாளர்களிற்கு வழங்க வேண்டும். |
| (iii) | 2021 நவம்பர் 29 இல் நடாத்தப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம், 24 கிலோ மீற்றர் விநியோக குழாய்கள் பொருத்துதலில் செயற்திட்டம் தொடங்கியதிலிருந்து 42 மாதங்கள் கடந்த பின்னர் 1.5 கிலோ மீற்றர் மாத்திரமே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்த உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக செயற்திட்டத்திற்கு தேவையான குழாய்களை ஒப்பந்தகாரர் வழங்கத் தவறியமையால் செயற்திட்ட பணிப்பாளர் நீர் வழங்கல் சபையின் குழாய்கள் மற்றும் பொருத்திகளை கோரியிருந்ததுடன் இது ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வழங்கப்பட்ட 2,123 மீற்றர் DI குழாய்களில் ஒப்பந்தகாரரால் 1,942.6 மீற்றர் மாத்திரம் பொருத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2022 மார்ச் 31 வரையும் நீர் வழங்கல் சபைக்கு குழாய்கள் திருப்பியனுப்புவதற்கு எவ்வித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய வழங்கல் ஒப்பந்தம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் தயாரிக்கப்பட்டதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு DI குழாய்கள் வழங்குதல் WASSIP நிதிகளின் கீழ் வழங்கப்பட்டது. | ஒப்பந்த உடன்படிக்கைக்கு அமைய நிர்மாண நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | ஒப்பந்தகாரரால் முறைப்படி தற்காலிக வீதிகளை மீளமைக்க தவறியமையால் வீதிக்கு பிரயோகிக்கப்பட்ட யுடீஊ விலகியிருந்ததுடன் பண்டாரவளை முதல் தியத்தலாவ வரை சேதமடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | IPC - 04 பட்டியலில் ஒப்பந்தகாரரிடமிருந்து ரூபா 2,758,945.00 ஆன தொகை கழிக்கப்பட்டது. | வீதி சேதங்களை திருத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(ஈ) **ஒருவெடிவேவ நீர் வழங்கல் திட்டம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | ஒருவெடிவேவ நீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2021 ஒக்தொபர் 14 ஆன பட்டியலிடப்பட்ட பூர்த்தியாக்க திகதியுடன் ரூபா 428.91 மில்லியன் கிரயத்தில் 2020 ஒக்தோபர் 15 இல் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் 2022 மார்ச் இறுதிவரையும் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தியாக்க தவறியிருந்ததுடன் அத்திகதியிலுள்ளவாறான பௌதீக முன்னேற்றம் 55 சதவீதமாக மாத்திரம் இருந்தது. | ஒப்பந்தகாரரின் முன்னேற்றம் கோவிட்-19 ஆல் பாதிக்கப்பட்டிருந்தது. | மாவட்ட முகாமையாளர்கள் பட்டியலிடப்பட்ட கால அட்டவணைக்குள் செயற்திட்டத்தைப் பூர்த்தியாக்கும் நோக்கில் செயற்திட்டத்தின் முன்னேற்றங்களை கண்காணிக்க வேண்டும். |
| (ii) | மஹியங்கனை முதல் ஜிறடுருகோட்டை வீதி வரை நீர்த்தேக்கத்திலிருந்தான குழாயிடல் வேலைகள் 2022 சனவரி இறுதிவரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | மஹியங்கனை முதல் ஜிறடுருகோட்டை வீதி வரையான குழாயிடல் தற்போது பூர்தியாக்கப்பட்டிருந்தது. | ஒப்பந்தகாரர் உரிய நேரத்தல் வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு முயற்சிக்க வேண்டும். |
| (iii) | அளவீட்டு பட்டியல் 08 இன் 01 ஆம் விடயத்தி உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 13.5 மில்லியன் பெறுமதியுடைய மிதவைக் கட்டமைப்பு நிர்மாணம் புறநேகமுவ நீர் வழ்கல் செயற்திட்டத்தின் கீழ் அமுலாக்கப்பட்டிருந்த பதியத்தலாவ, பெலகன்வேவ நீர் வழங்கல் செயற்திட்டத்தைப் போல இந்த செயற்திட்டத்திற்காக ஒரு நீர்த் தேக்கத்தை நிர்மாணிப்பதற்கு வாய்மொழி மூலம் உடன்பட்டமையால் அகற்றப்பட்டிருந்த போதிலும் அதில் செலுத்தப்பட்ட ரூபா 2.7 மில்லியன் தொகையான முற்பணம் மீளாய்வாண்டு இறுதிவரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நீர்த்தேக்க நிர்மாணத்தின் கிரய சேமிப்பு கவனத்தில் கொள்ளப்பட்டது. | மேலதிகமாக செலுத்தப்பட்ட முற்பணங்களை உடனடியாக அறவிடப்பட்டதை உறுதிப்படுத்த வேண்டும். |
| (iv) | 6 வகை தனிப்பட்ட தூரங்கள் தொடர்பில் 2,958 மீற்றர் PE மற்றும் Upvc குழாய்கள் 2022 சனரி இறுதிவரையும் | 2,958 மீற்றர் PE மற்றும் Upvc குழாய்கள் இடல் வேலைகள் ஏற்கனவே | குழாயிடல் நடவடிக்கைகளிற்கான உரிய நிறுவனங்களிடமிருந்து முன்னனுமதி |

| | | | |
|---|---|---|---|
| | தொடங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மஹாவலி அதிகாரசபை வளவுக்கு மேலாக விநியோக குழாய்கள் இடுவதற்கான அனுமதி 2022 மார்ச் இறுதி வரையும் மஹாவலி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை. | பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. | பெறப்பட வேண்டும். |

**3.5 பயன்படுத்தாத / குறைவாகப்பயன்படுத்திய வளங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| இல | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மற்றும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு என்பவற்றிற்கு இரண்டு வாகனங்கள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீது ரூபா 3.94 மில்லியன் ஏற்பட்டது. எவ்வாறாயினும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு விடுவிக்கப்பட்ட வாகனங்கள் செயற்திட்ட நெறிப்படுத்தல் ஆவணத்தின் 33 மற்றும் 34 ஆம் பிரிவிற்கு முரணாக நாளாந்தம் உத்தியோகத்தரின் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தமை வெளிப்பட்டது. | தற்போது நாங்கள் செயற்திட்டத்திற்காக சுத்திகரிப்பு பொறி திட்டமிடல் மற்றும் வடிவமைப்புடன் ஈடுபடுகின்றவர்களால் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கழிவகற்றல் பிரிவிற்காக வாகனங்களை ஒதுக்கியிருந்தோம். | உரிய நிறுவனங்களிடமிருந்து வாகனங்களை பெறுவதற்கு பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டின் பொது ரூபா 27.2 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட நடமாடும் ஆய்வுகூடம் முறைப்படி வாகனங்களின் சட்டரீதியான உரிமையாண்மையை மாற்றப்படாமல் 2019 ஏப்ரல் 10 இல் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மாதிரிகள் சேகரிப்பதற்காக மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு 24 நாட்களிற்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | நடமாடும் ஆய்வுகூட உரிமையாண்மை 2019.04.10 இல் DNCWS இற்கு மாற்றப்பட்டிருந்தது. பின்னர் ஆய்வுகூடம் DNCWS பரீட்சிப்பிற்காக பயன்படுத்தப்பட்டது. | செயற்திட்ட நெறிப்படுத்தல் ஆவணத்தின் கூறு 3 இலுள்ள இணைந்த அறிவுறுத்தல் மூலம் செயற்திட்ட நிதிகளின் வினைத்திறனான பயன்டுத்தலை உறுதிப்படுத்தும் நோக்கில் முறையான கண்காணிப்பு பொறிமுறை இருக்க வேண்டும். |
| (இ) | ரூபா 90.98 மில்லியன் பெறுமதியுடைய ஒவ்வொன்றும் 15,00 ஆன தண்ணீர் மீட்டர் மற்றும் பூண்கள் சமுதாய அடிப்படை நீர் செயற்திட்டங்களிற்கு விநியோகிப்பதற்கு | அந்த பொருட்கள் எதிர்கால வீட்டு இணைப்புகளிற்காக தேவைப்பட்டன. | செயற்திட்ட நிதிகளின் வினைத்திறனான பயன்டுத்தலை உறுதிப்படுத்தும் நோக்கில் முறையான கண்காணிப்பு பொறிமுறை |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதங்களின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 41.95 மில்லியன் பெறுமதியுடைய 3100 தண்ணீர் மீட்டர்கள் மற்றும் 13282 பூண்கள் மாவட்ட முகாமையாளர் அலுவலகத்திற்கு விநியோகிக்காமல் 2022 மே 18 வரையும் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவில் இருந்தது. எவ்வாறாயினும், ஒவ்வொரு மாவட்டங்களின் புதிய நீர் இணைப்புகளிற்காக ஏற்கனவே பயன்படுத்திய தண்ணீர் மீட்டர்களின் தொகையை மெய்மையாய்வு செய்வதற்கு கணக்காய்விற்கு எவ்வித சான்றுகளும் பெறப்பட்டிருக்கவில்லை. | | இருக்க வேண்டும். |

**3.6 சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| நுவரெலியா மாவட்ட அலுவலகத்தின் கணனிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் உள்ளடங்கலான 125 நிலையான சொத்து விடயங்கள் நீர் வழங்கல் அமைச்சு செயலாளரின் முன்னனுமதி இல்லாமல் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு விடுவிக்கப்பட்டிருந்ததமை அதவானிக்கப்பட்டது. | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, PHDT மற்றும் DNCWS இன் தேவைகள் செயற்திட்டத்தின் கூறு 3 இலுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் இனங்கண்டு அனுமதிக்கப்பட்டன. | செயற்திட்டத்தின் கூறு 3 இலுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் இனங்காணப்பட்ட உடமையாளர்களிற்கு செயற்திட்டத்தின் சொத்துக்கள் விடுவிக்கப்படும் போது நீர் வழங்கல் அமைச்சு செயலாளரின் முன்னனுமதி எடுக்கப்பட வேண்டும். |

## 3.7 மனிதவள முகாமைத்துவம் தொடர்புபட்ட விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| இல | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட கண்காணிப்பு பிரிவின் பதவியணி 27 பதவிகளைக் கொண்டுள்ளது. அவற்றில், பிரதி செயற்திட்ட பணிப்பாளர், மாவட்ட முகாமையாளர்கள், பொறியியலாளர் மற்றும் சமூகவியலாளர் போன்ற பிரதான பதவிகள் உள்ளடங்கலாக 18 பதவிகளில் 81 வெற்றிடங்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6 ஆண்டுகளிற்கு மேலாக நிரப்பப்படாது இருந்தது. மேலும், நிறுவன மற்றும் தொலைத்தொடர்பு நிபுணர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் செயற்திட்ட செயலாளர் போன்ற அனுமதிக்கப்பட்ட பதவிகளிற்காக எவ்வித உத்தியோகத்தர்களும் மீளாய்வாண்டு இறுதிவரை சேர்க்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேல், மீளாய்வாண்டு இறுதிவரையும் ஊழியர்களிற்கும் எவ்வித கடமைப் பட்டியலும் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | வேலைகளின் தேவகளின் பிரகாரம் சகல வெற்றிடங்களும் நிரப்பப்படுகின்றதுடன் சமூகவியலாளர் மற்றும் பிரதி செயற்திட்ட பணிப்பாளர் பதவிகள் போன்ற சில பதவிகள் 6 ஆண்டுகளிற்கு மேலாக நிரப்பப்பட்டிருக்கவில்லை. | தாமதமில்லாமல் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் அனுமதிக்கப்படாத பதவியணியை சேர்பதை தவிர்ப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மேலும், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஊழியருக்கும் கடமைப் பட்டியல் வழங்க வேண்டும். |
| (ஆ) | மேலும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2019 மார்ச் 15 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கைக்கு முரணாக செயற்திட்டமானது சேவை ஒப்பந்தத்தின் கீழ் 133 ஊழியர்களை ஈடுபடுத்தியிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 69.20 மில்லியன் தொகையான வேதனங்கள் செலுத்தப்பட்டிருந்தது. அதில், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்டிருக்காத நில அளவையாளர், படவரைஞர் மற்றும் காணி உத்தியோகத்தர் போன்ற 08 பதவிகளிற்காக 29 ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | நாங்கள் கொடையாளர்களிற் அறிவிப்பதற்கும் ஆட்சேர்ப்பதற்கு முன்னர் அவர்களுடைய ஒத்திசைவை பெறுவதற்கும் முயற்சித்திருந்தோம். அந்த சகல பதவிகளும் குறுகிய கால ஒப்பந்தங்களில் உள்ளன. நாங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெற்றிருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளை கடுமையாக பின்பற்ற வேண்டும். |
| (இ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2019 மார்ச் 05 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.3.2 ஆம் பிரிவிற்கமைய வினைத்திறனான செயற்திட்ட முகாமைத்துத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் முழு நேர அடிப்படையில் செயற்திட்ட பணிப்பாளர் சேர்க்க வேண்டியருந்த போதிலும் 2020 நவம்பர் 05 இலிருந்து தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் (மேல- வடக்கு) பிரதி பொது முகாமையாளரார் அவர் பதவியுயர்த்தப்பட்டிருந்தார். | அவர் காலம் முழுவதும் செயற்திட்டத்துடன் இணைந்திருந்தமையால் தற்போது இறுதி அமுலாக்கல் கட்டத்தில் இருக்கும் செயற்திட்டத்திற்கு புதிய ஆட்சேர்ப்பு தேவைப்பட்டிருக்காமையால் எதிர்காலத்தில் வேலைகளை தொடருவதற்கு அவரால் இயலக்கூடியதாக உள்ளது. | முழு நேர செயற்திட்ட பணிப்பாளரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |